# DEPOSITION OF WITNESS
## ( Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE CHEYYUR

**Calender :**
**Miscellaneous : CC Case No.44 /2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW1 , LW1**

| | |
|---|---|
| Name | :சாந்தா |
| Father's/Husband Name | :சந்திரசேகர் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 06.08.2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சென்னை , பெரம்பூரில் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனார் பெயர் டி. முத்துசாமி முதலியார் ஆகும். அவர் தனியார் பேருந்து முதலாளியாக பணியாற்றினார். அவருக்கு 3 பெண்கள் மற்றும் 2 மகன்கள் ஆவார்கள். என் தகப்பனார் முத்துசாமி முதலியார் கடந்த 10/09/2010 ஆம் தேதி இறந்து விட்டார். என் அப்பா இறந்ததற்கான இறப்பு சான்று அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அப்பாவிற்கு சாந்தா ஆகிய நான் மற்றும், உமா விஸ்வநாதன், செல்வம், வசந்தி, சிவபிரகாசம் ஆகிய நாங்கள் அவரின் வாரிசுதாரர்கள் ஆவோம். அந்த வாரிசு சான்றிதழ் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2.எனது தகப்பனார் வெங்கடசாமி ரெட்டியாரிடமிருந்து விவசாயம் செய்யும் நிலத்தை கிரைய பத்திரமான 1041/1960ன் படி கிரையம் பெற்றார். அந்த கிரைய

ஆவணத்தின் சான்றிட்ட நகல் **அ.சா.ஆ.** 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆவண எண். 370/1986 ன் படி எனது தகப்பனார் மதுராந்தகம் வங்கியில் அந்த சொத்தினை அடமானத்திற்கு வைத்து ரூ. 25,000/- பெற்றார். அந்த அடமான பத்திரம் **அ.சா.ஆ.** 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த அடமான பத்திரத்தில் உள்ள 1ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம் , 3ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம் , 4 ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம், 5ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம், 6ம் பக்கத்தில் உள்ள முதல் கையொப்பம் என் தகப்பனாரின் கையொப்பம் ஆகும் . அவைகள் முறையே **அ.சா.ஆ.** 5 முதல் **அ.சா.ஆ.** 9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. அதன் பின் நானும் எனது மகன் கருணாகரன் ஆகியோர்கள் வங்கிக்கு சென்ற கிரைய பத்திரத்தை திரும்ப பெறுவதற்காக கேட்டபோது கூவத்தூரை சேர்ந்த தீனதயாளன் என்பவர் அந்த கிரைய பத்திரத்தை பெற்றுக்கொண்டதாக சொல்லி எங்களிடம் கடிதம் ஒன்றை காண்பித்தார்கள். என்னிடம் காட்டப்படும் அந்த கடிதம் மதுராந்தகம் நிலவள வங்கியில் என்னிடம் காட்டப்பட்ட கடிதம் ஆகும். அந்த கடிதம் **அ.சா.ஆ.**10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4. அ.சா.ஆ.10-ல் உள்ள முத்துசாமியின் கையொப்பம் என் தகப்பனாருடையது அல்ல. அவர் அவ்வாறு கையொப்பம் செய்யமாட்டார். அ.சா.ஆ10 ல் உள்ள முத்துசாமி முதலியார் என்று போடப்பட்டுள்ள கையொப்பம் **அ.சா.ஆ.** 11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அ.சா.ஆ10-ல் ஈடு வைத்த பத்திரத்தை தீனதயாளன் பெற்றுக்கொள்ள ஏஜென்டாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நாங்கள் கடந்த 2016 ம் வருடம் எங்கள் சொத்தினை பார்வையிட சென்றபோது அளவுக்கல் நட்டு வைத்திருந்தார்கள். யார் அவ்வாறு செய்தார்கள் என்று விசாரித்தபோது சென்னை தேனாம்பேட்டையை சேர்ந்த சசிகலா, ரகுபதியும் மற்றும் இயக்குனர் மகாதேவன் என்பவர் உங்கள் நிலம் என்று தெரிந்து தான் வாங்கியதால் அளவுக்கல் போட்டதாக தெரிந்து கொண்டோம்.

5. என் தகப்பானர் வாங்கிய கடனை பைசல் செய்த பின்பு வங்கியில் விசாரித்தபோது அதற்கான குறிப்பினை எங்களிடம் காட்டினார்கள். அந்த குறிப்பின் நகல் **பட்டியல் ஆவணம்.** 6 ஆகும். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்த புகார் ஆகும். அந்த புகாரின் நகல் **அ.சா.ஆ.** 12 ஆக குறியீடு செய்யப்படுகிறது, (அந்த புகாரின் அசல் இதன் தொடர்புடைய CC. 39/2020 வழக்கில் ஆவணமான தாக்கல் செய்யப்பட்டுள்ளது), போலிசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

(அ.சா.ஆ.10 மற்றும் அ.சா.ஆ.11 எதிரி தரப்பில் ஆட்சேபனையோடு குறியீடு செய்யப்படுகிறது)

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

6. அ.சா.ஆ. 3 எனது தந்தையிடமிருந்து வெங்கடசாமி ரெட்டியார் வாங்கியது என்றால் சரிதான். வெங்கடசாமி ரெட்டியாருக்கும், ஆஜர் எதிரியின் மனைவிக்கும் என்ன உறவு என்றால் வெங்கடசாமி ரெட்டியாரின் வளர்ப்பு பேத்தி என்று அவரே சொல்லி எனக்கு தெரியும். 2014 ல் தான் நில சம்பந்தமான விவரங்கள் எனக்கு தெரிய வந்தது என்றால் சரிதான்.

7.கிரையம் ஆன உடன் எனக்கு தெரிய வந்து நான் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த கிரையத்தை யார் செய்தார்கள் என்றால் ஆஜர் எதிரி தீனதயாளன் விற்றதாக தெரிந்து கொண்டேன். அந்த கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேன். அதன் நகலை போலிசார் விசாரணையில் கொடுத்னோ என்றால் கொடுத்தேன். பொதுவாக ஒரு கிரையம் கொடுத்தால் அந்த நிலத்தில் யார் யாருக்கு உரிமை உள்ளதோ அனைவரும் சேர்ந்து தான் கிரையம் கொடுக்க வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும்.

8. நான் பார்த்ததாக சொல்லப்படும் கிரைய பத்திரத்தில் ஆஜர் எதிரியின் கையொப்பம் இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. அந்த கிரைய பத்திரத்தில் ஆஜர் எதிரி கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரியின்

மனைவி இந்த வழக்கு சொத்து தங்களுக்கு தான் சொந்தம் என்று என் மீது சிவில் வழக்கு ஒன்றை செங்கல்பட்டு மாவட்ட முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செயதுள்ளர். அந்த வழக்கு எண். OS,252/2020 என்றால் சரிதான். எனவே அந்த சொத்திற்கு நான் தான் உரிமையாளரா என்று உரிமையியல் நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும் என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

9. வங்கிக்கு சென்று மேற்சொன்ன ஆவணத்தை எப்போது பார்த்தேன் என்றால் 2014 ம் வருடம் சென்றேன். தேதி , மாதம் நினைவு இல்லை. வழக்கு சம்பந்தப்பட்ட நிலங்களை BGR நிறுவனங்களுக்கு 2011 அம் ஆண்டு விற்கப்பட்டது என்றால் சரிதான். 2011 ம் வருடம் கிரையம் ஏற்படும் போது எனது தந்தையார் நில கூட்டுறவு வங்கியில் அடமானம் வைத்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் அப்பா வழக்கு நிலத்தை அடமானம் வைத்த விவரம் யார் சொல்லி தெரியும் என்றால் எனது தந்தை சொல்லி எனக்கு தெரியும். 2010ம் வருடம் எனது தந்தை இறந்து விட்டார் என்றாலும், எனது தந்தை உயிருடன் இருக்கும் வரை அடமானம் வைத்த விவரம் தெரிந்தபோதும் 2014 வரை அதை பற்றி தெரிந்து கொள்ள முயற்சிகள் எடுக்கவில்லை என்றால் எனது அப்பா இறந்த பின்னர் எனது அண்ணனும் இறந்து விட்டார். எனது தம்பி இது பற்றி எங்களிடம் சொன்ன பிறகு தான் அந்த விவரங்களை சேகரிக்க ஆரம்பித்தோம்.

10 எனது அப்பா கூட்டுறவு வங்கியில் பெற்ற கடனை எப்போது செலுத்தினார் என்றால் அது பற்றி எனக்கு சரியாக நினைவு இல்லை . 2014 ம் வருடம் நான் வங்கிக்கு சென்றபோது எனது தந்தை அடமானத்திற்கான பணத்தை எப்போது செலுத்தினார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் எனக்கு தெரியாது. 2004 ம் வருடம் எனது தந்தை அந்த கடனை செலுத்திவிட்டார் என்று சொன்னால், அது சரியாக எனக்கு நினைவில் இல்லை. 2014 ம் வருடம் நான் வங்கிக்கு சென்று பார்த்தபோது அந்த ஆவணத்தை ஆஜர் எதிரி எப்போது வாங்கி சென்றார் என்றால், மாதம், தேதி, வருடம் குறித்து நினைவு இல்லை.

11. 2004 ல் எனது தந்தை அந்த கடனை அடைத்தது முதல் 2010 ல் அவர் இறக்கும் வரை அந்த ஆவணத்தை வங்கியில் இருந்து வாங்கி சென்றுவிட்டதற்காக யார் மீதாவதோ அல்லது ஆஜர் எதிரி மீதோ வழக்கு ஏதேனும் தாக்கல் செய்துள்ளாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் அ.சா..ஆ. 4 ஆவணத்தில் எனது தந்தையாரும், எனது தம்பி செல்வமும் சேர்ந்து அடமானம் வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இரண்டு பேரும் சேர்ந்து அடமானம் வைத்ததால் அ.சா.ஆ. 10 யை மட்டும் வைத்து மூல பத்திரங்கள் திருப்பி கொடுக்கப்படமாட்டாது என்றால் சரியல்ல. 2014ம் வருடம் இந்த விவரங்களை தெரிந்த பின்னரும் எனது தம்பி செல்வம் ஆவணங்களை ஏன் திரும்பி கொடுத்ததாக வாங்கி மீது வழக்கு ஏதேனும் தாக்கல் செய்தாரா என்றால் எந்த வழக்கும் வங்கியின் மீது தாக்கல் செய்யவில்லை. 2014 ம் வருடம் நான் வங்கிக்கு சென்ற போது என்னுடன் செல்வமும் வந்தார் என்றால் சரிதான்.

12. 2014 வருடம் நான் வங்கிக்கு சென்றபோது என்னுடன் என் தம்பி செல்வமும் வங்கிக்ங வந்ததாகவும் பத்திரங்களை எங்கள் அனுமதி இல்லாமல் எப்படி கொடுத்தீர்கள் என்று வங்கியில் இருந்தவர்களை கேள்வி கேட்ட விவரத்தை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எனது தந்தை தனியார் பேருந்து முதலாளி என்ற விவரத்தை தனது புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளேன். அசா.ஆ. 5 முதல் அசா..ஆ. 9 மற்றும் அ.சா.ஆ. 10 ல் உள்ள கையெழுத்துக்களை போலிசார் எப்போது என்னிடம் காண்பித்து விசாரித்தார்கள் என்றால் சரியாக நினைவு இல்லை. அந்த ஆவணங்களில் உள்ள கையெழுத்துக்களை காண்பித்து எனது தந்தையின் கையெழுத்தா என்று விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள்.

13. அவ்வாறு என்னிடம் கையெழுத்துக்களை காண்பித்து விசாரித்தபோது எது எனது தந்தையின் கையெழுத்து. எது எனது தந்தையின் கையெழுத்து இல்லை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் குறிப்பிட்டு

சொல்லியுள்ளேன்.இந்தவழக்கு சம்பந்தப்பட்ட நிலத்தை விற்றவர்களுக்கும், கிரையம் பெற்றவர்களுக்கும் 27/03/2014 அன்று வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். எனக்கு ஆங்கிலம் சரியாக படிக்கத் தெரியாது. அந்த அறிவிப்பில் நான் ஆஜர் எதிரியை பற்றியோ அல்லது நில வங்கியில் ஆஜர் எதிரி எனது தந்தையாரின் கையொப்பத்தினை போலியாகஇட்டு ஆவணங்களை பெற்றது குறித்து குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.(அரசு தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.)

14. இந்தவழக்கு சம்பந்தப்பட்ட சொத்துக்கள் எனது தந்தையின் சுவாதினத்தில் இருந்தது என்பதை நிரூபிக்க ஆவணங்கள் ஏதேனும் போலிசார் என்னை விசாரிக்கும் போது கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 2014 ம் வருடம் இந்த வழக்கு நிலம் சம்பந்தமாக வருவாய் கோட்டாட்சியரிடம் பட்டாவிற்காக மனு செய்தபோது உரிமையியல் பிரச்சனை இருப்பதால் பட்டா குறித்து நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வருமாறு சொல்லிவிட்டார்.

15 எனது தந்தை காலத்தில் இருந்து, இந்த வழக்கு சொத்திற்கு எனது தந்தை பெயரில் பட்டா இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தை இறந்த பின்பு அவர் பெயரில் உள்ள பட்டாவை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த பட்டாவின் நகலை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் அது பற்றி எனது மகன் கருணாகரனை தான் கேட்க வேண்டும். புகாரை காவல் நிலையத்தில் கொடுத்த பிறகு பட்டா மாற்றுவதற்காக கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனது அப்பா பெயரில் உள்ள பட்டாவை எங்கள் பெயரில் மாற்றி தரகோரி மனுதாக்கல் செய்துள்ளேன். புகார் கொடுத்த பிறகாவது இந்த வழக்கு சம்பநத்மான சொத்தின் கிராம அ- பதிவேடு யார் பெயரில் உள்ளது என்று விசாரித்தேனா என்றால் அதை எனது மகன் தான் விசாரித்தார்.

16. இந்த வழக்கு சொத்தானது எனது தந்தையார் சுவாதினத்திலோ பட்டா அவர் பெயரிலோ எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றால் சரியல்ல.

அ.சா.ஆ. 3 வெங்கடசாமி ரெட்டியாரால் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் என்றாலும் எனது தந்தையார் கிரையம் வாங்கிய சொத்து இல்லை என்றாலும் சரியல்ல. எனவே வழக்கு சொத்துக்கு முத்துசாமி முதலியார் உரிமை பெற்றவர் அல்ல என்றால் சரியல்ல. எனவே ஆஜர் எதிரிக்கு எனது தந்தையார் போல் கையொப்பம் செய்ய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

17. BGR நிறுவனத்திற்கு சென்று இந்த வழக்கு சொத்தினை கிரையம் பெற்ற போது அ.சா.ஆ. 3 அசல் ஆவணங்கள் அவரிடம் உள்ளதா என்று கேட்டேனா என்றால் எனது மகனைத்தான் கேட்க வேண்டும் . எனக்கு தெரிந்து போலிசார் என்னை விசாரித்தபோது கிரையம் பெற்றதாக சொல்லப்படும் நபர்களையும் அழைத்து அ.சா.ஆ. 3 யை பற்றி விசாரித்தார்களா என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

18. வெங்கடசாமி ரெட்டியார் குடும்பத்திற்கும் எனது தந்தைக்கும் நல்ல உறவு இருந்தது என்பதும் பணப்பரிவர்தனைகள் நடந்து கொண்டிருந்த விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வெங்கடசாமி ரெட்டியார் மற்றும் அவரின் குடும்பத்தினர் செய்து கொண்ட பரிவர்த்தனைகளில் எனது தந்தை முத்துசாமி முதலியார் சாட்சி கையொப்பம் செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அ.சா.ஆ. 3 ல் குறிப்பிட்டுள்ள சொத்துக்களை வெங்கடசாமி ரெட்டியார் சொன்னால் எனது தந்தை கிரையம் செய்து அந்த பணத்தை வெங்கடசாமி ரெட்டியாரிடம் கொடுத்து விடுவார் என்றால் சரியல்ல.

19. எதிரி தீனதயாளன் எங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இருந்திருந்தால் 2011 ல் புகாரில் குறிப்பிட்டுள்ள கிரையத்தில் கையொப்பம் செய்திருப்பார் என்றாலும் அவ்வாறு கையொப்பம் செய்யாததால் எங்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு கிடையாது என்றாலும் சரியல்ல. அ.சாஆ3 ன் மூல பத்திரத்தை வைத்து ஆஜர் எதிரி எந்த பரிவர்த்தனையும் செய்து லாபம் அடைந்ததாக எந்த ஆவணமும் நீதிமன்றததில் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மாவட்ட உரிமையியல் நிதிமன்றத்தில் இந்த வழக்கு சொத்து

சம்பந்தமாக வழக்கு நிலுவையில் உள்ளதால் இன்றைய தேதியில் அந்த சொத்தின் உரிமையாளர் நாங்கள் தான் என்று அறுதியிட்டு கூற இயலாது என்றால் சரியல்ல. ஆஜர் எதிரி அ.சா.ஆ.3 ன் மூல பத்திரத்தை வைத்து எந்த லாபமும் அடையாததால் என் தந்தையின் கையொப்பத்தினை போலியாக செய்து ஆவணங்களை பெற வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

20. எனது புகாரில் சொல்லியுள்ள நிலம் சம்பந்தமான சொத்துக்களை விற்றவர்கள் தங்களுக்கு சொந்தமானது என்று கிரையம் கொடுத்துள்ள நிலையில் அந்த கிரையத்திற்கும் ஆஜர் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அ.சா.ஆ. 3 ன் மூல ஆவணங்கள் எதிரியிடம் கிடையாது என்றால் சரியல்ல. அந்த ஆவணங்கள் எனது தந்தையாரிடமோ , அல்லது எனது சகோதரர் செல்வத்திடமோ இருக்க வாய்ப்பு உள்ளது என்றால் சரியல்ல.

(எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்படுகிறது)

மறுவிசாரணை.

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.

**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No. 44 /2020**
**Sessions :**
**Deposition of Witness for :PW2 , LW3**

| | |
|---|---|
| Name | :கருணாகரன் |
| Father's/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of** 06.08.2022.

முதல் விசாரணை:-

1. நான் தற்போது சென்னை பெரம்பூரில் வசித்து வருகிறேன். நான் உயர்நீதிமனறத்தில் வழக்கறிஞராக பணியாற்றி வருகிறேன். அ.சா1 எனது தாயார் ஆவார். பட்டியல் சாட்சி 2 வசந்தி எனது சித்தி ஆவார்கள். பட்டியல் சாட்சி 4 சசெல்வம் எனது மாமா ஆவார். எனது தாத்தா டி.முத்துசாமி முதலியார் வழித்தடங்களில் தனியார் பேருந்தை கொண்டு இயக்கும் தொழில் செய்து கொண்டு வந்தார். அவருக்கு 3 மகள்ளும் 2 மகன்களும் உள்ளனர்.

2. செய்யுர் தாலுக்கா உழுதமங்களம் கிராமத்தில் எனது தாத்தா டி . முத்துசாமி முதலியார், வெங்கடசாமி ரெட்டியாரிடம் இருந்து சில விவசாய நிலங்களை கிரையம் பெற்று அந்த கிரையத்தை மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண். 1041/1960 ஆக பதியப்பட்டது. 1986 ஆம் ஆண்டு சவுக்கு சாகுபடி

செய்ய மதுராந்தகம் நிலவள வங்கியில் சுமார் ரூபாய். 25, 000/- கடனான பெற்று அசல் ஆவணம் 1041/1960-யை அடமானம் வைத்து அந்த அடமானத்தை மதுராந்தகம் சார்பதிவாளர் அலுவலகத்தில் 370/1986 ஆக பதியப்பட்டது.

3. இதற்கு இடையில் .10/09/2010 எனது தாத்தா டி.முத்து சாமி முதலியார் காலமாகிவிட்டார் .அவர் காலமான பிறகு நானும் எனது அம்மாவும் முத்து சாமி முதலியாரின் மூத்த மகளும் மதுராந்தகம் நிலவள வங்கியில் சென்று டிஸ்சார்ஜ் செய்து டிஸ்சார்ஜ் சர்டிவிகேட் பெற்று அசல் ஆவணத்தை பெற்றோம். அவர்கள் டிஸ்சார்ச்ஜ் சர்பிகேட் கொடுத்தார்கள். அசல் ஆவணத்தை கேட்ட போது கூவத்தூரை சேர்ந்த தீனதயாளன் அசல் ஆவணத்தை பெற்றுக்கொண்டதாக சொன்னார்கள். அந்த கடித்தததில் உள்ள கையெழுத்து 'என் தாத்தாவின் கையெழுத்து அல்ல. அவர் கையொப்பம் செய்தது போல் தீனதயாளனே கையொப்பம் செய்து அசல் அவணத்தை பெற்றுக்கொண்டதாக தெரியவந்ததது. வெறும் கண்ணால் பார்த்தாலே அது என் தாத்தாவின் கையெழுத்து இல்லை என்று தெரிந்தது.

4. விவரம் அறிந்து கூவத்தூரை சேர்ந்த தீனதயாளனிடம் சென்று அசல் ஆவணத்தை திருப்பி தருமாறு கேட்டேன். அதற்கு அசல் அவணம் என்னிடம் தான் உள்ளது என்றும் எனது தாத்தா முத்து சாமி முதலியாருக்கு விற்பனை செய்த வெங்கடசாமி ரெட்டியின் வளர்ப்பு மகள் சுகந்தி என்றும் வளர்ப்பு மகளின் கணவர் நான் தான், தீனதயாளன் என்றும் இது ஒரு பெயரளவிலான ஒரு ஆவணம் என்றும் இதன் உண்மையான உரிமையாளர் வெங்கடசாமி ரெட்டியார் என்றும் அவர் இறந்த பின்பு அவரின் ஒரே வளர்ப்பு மகளின் கணவர் நான் என்றும் அதனால் அசல் ஆவணத்தை திருப்பி தர முடியாது என்றும் உங்களால் முடிந்ததை பார்த்துக்கொள் என்று கூறிவிட்டார். எங்கள் நிலங்களை சுற்றி பார்க்க நாங்கள் சென்ற போது எங்கள் நிலத்தில் சிலர் எல்லை கற்களை நட்டு வைத்திருந்தனர். அருகில் இருந்தவர்களை விசாரித்தபோது BGR boiler Pvt ltd. நட்டதாக சொன்னாகள். நாங்கள் எங்கள் இடத்திற்கு வில்லங்கம் போட்டு

பார்த்தபோது சர்வே எண். 195/1 ல் 1 .54 செண்டும் சர்வே எண். 195/3 ல் 0.67 செண்டும். சர்வே எண். 196/3 ல் 0.57 செண்டும் 197/2 பி 1 ல் 40 செண்டும் ஆக மொத்தம் 3 ஏக்கர் 18 செண்டும் நில அபகரிப்பு செய்து வந்தார்கள். இதை அடுத்து தேனாம்பேட்டையில் உள்ள BGR கம்பனியை அனுகி திருமதி.சசிகலா ரகுபதி மேனஜிங் டைரக்டர் மற்றும் மகாதேவனை அணுகி எங்கள் இடத்தின் ரிஜிஸ்ரேசனை கேன்சல் செய்து தருமாறு கேட்டோம். அதற்கு அவர்கள் நாங்கள் செய்யூரை சுற்றி power plant வைக்க பல இடங்களை வாங்கினோம். உங்கள் இடத்தை தெரிந்தே தான் வாங்கினோம் என்றும் நாங்கள் பெரிய ஓர் கார்ப்ரேட் கம்பனி என்றும் எங்கள் கம்பனியில் பல ஆயிரம் கோடி புரல்வதாகவும் அதனால் இந்த இடத்தை திருப்பி தர இயலது என்றும் ரத்து செய்ய இயலாது என்றும் கூறிவிட்டனார். இந்த சொத்தை உமா மகேஷ்வரி வகையறாக்களும், தீனதயாளனும் கூட்டாக சதி செய்து எங்கள் நிலத்தை அபகரித்து விட்டனர். மற்றும் சர்வே எண். 22/1 ல் 0.62 செண்டும் எதிரி தீனதயாளின் மனைவியான சுகந்தி என்பவர் ரகுராம் என்பவருக்கு எங்கள் நிலத்தை கிரைய ஆவணம் செய்து கொடுத்திருக்கிறார்.

5.அந்த இடத்திற்கு வெங்கடசாமி முதலியாரின் வளர்ப்பு மகளுக்கு அவர் லத்தூர் கிராமத்தில் எழுதி கொடுத்த உயிலை உழுதமங்களம் கிராம சொத்து என்று பொய்யாக புனைந்து இடத்தை அபகரித்து விட்டனர். இதற்கு சாட்சியாக எதிரி தீனதயாளன் கையொப்பம் செய்துள்ளார். எதிரி தீனதயாளனிடம் அசல் ஆவணம் 1041/1960 உள்ளது என்று தெரியவந்தது. போலிசார் வழக்கு சம்பந்தமாக 2004 ஆம் ஆண்டுக்குரிய தாத்தாவின் கையொப்பம் போட்ட ஆவணங்கள் குறித்து கேட்டார்கள்.

6.அதற்கு நான் எனது தாத்தா குப்பம்மாள் என்பவருக்கு 2004 ம் வருடம் கிரையம் செய்த ஆவணத்தின் உண்மை நகலை பெற்று நான் போலிசாரிடம் கொடுத்தேன். அந்த ஆவணம். **அசா.ஆ.** 13 ஆக குயியீடு செய்யப்படுகிறது. ( எதிரி தரப்பால் ஆட்சேபனை செய்து குறியீடு செய்யப்படுகிறது) அந்த ஆவணத்தில்

கிரையம் கொடுப்பார் என்ற இடத்தில் எனது தாத்தா டி.முத்துசாமி முதலியாரின் கையொப்பம் ஒவ்வொரு பக்கத்திலும் உள்ளது.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

7. அ.சா 1 எனது அம்மா கொடுத்த புகாரை நான் தான் எழுதினேன். BGR நிறுவனத்திற்கு கிரையம் கொடுத்த ஆவணத்தை நான் பார்வையிட்டேன். இந்த வழக் குசம்பந்தப்பட்ட நிலங்களான 3.18 ஏக்கரை உமாமகேஸ்வரி வகையறா , BGR நிறுவனத்திற்கு விற்றனர். இந்த கிரைய ஆவணத்தில் எதிரி தீனதயாளன் கையொப்பம் செய்யவில்லை. அந்த ஆவணத்தில் ஆஜர் எதிரி சாட்சி கையொப்பமும் செய்யவில்லை என்றால் சரிதான். 2014 ம் வருடம் 3 ம் மாதம் தேதி சரியான நினைவு இல்லை அன்று எனது தாயாரும் மதுராந்தகம் வங்கிக்கு நிலம் சம்பந்தமாக டிஸ்சார்ஜ் சர்டிபிகேட் பெற்ற அசல் ஆவணங்களை பெறுவதற்காக சென்றிருந்தேன்.

8. அதை அடமானம் வைத்து 2004-ம் வருடம் அடமான கணக்கு முடிக்கப்பட்டது. அ.சா.ஆ. 4 அடமான பத்திரம் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரிதான். 2014 ல் டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு 2018 ம் ஆண்டு ரசிது பதியப்பட்டது. அந்த ரசிதை பதிவு செய்தது வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்பு தான் என்றால் சரிதான். அ.சா.ஆ.4 அசல் ஆவணம் என்றால் சரிதான். மேற்சொன்ன ஆவணம் போலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டது. முதல் தகவல அறிக்கை பதிவு செய்து இறுதி அறிக்கை தாக்கல் செய்த பிறகு மேற்சொன்ன ஆவணம் போலிசாரால் சம்மன் அனுப்பி பெறப்பட்டது.

9. போலிசார் என்று அந்த ஆவணத்தை பெற்றார்கள் என்று தேதி எனக்கு தெரியாது. புகாரை நாங்கள் கொடுத்த போது அ.சா.ஆ. 4 வங்கியில் தான் இருந்தது என்றால் சரிதான். வங்கியில் பொதுவாக அடமானத்தை டிஸ்சார்ஜ் செய்யும் போது அடமானம் வைத்த அசல் ஆவணங்களை திருப்பி கொடுப்பார் என்றால் சரிதான். மேலும் பொதுவாக அடமானத்தை திருப்பி தரும்போது அடமானத்தை ரத்து செய்து ஆவணங்களை திருப்பி கொடுப்பார்கள் என்றால் சரிதான்.

10. அ.சா.ஆ. 4 யை எனது தாத்தாவும் எனது மாமாவும் சேர்ந்து அடமானம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். பொதுவாக இரண்டு நபர்கள் சேர்ந்து அடமானம் போட்டால் இரண்டு நபர்களின் கையொப்பம் பெற்று தான் ஆவணங்களை திருப்பி கொடுக்கப்படும் என்றால் சரிதான். எனவே எனது தாத்தாவும் , மாமாவும் இணைந்து கையொப்பம் செய்திருந்தால் தான் அசல் ஆவணங்கள் திருப்பி கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். 2014 ம் வருடம் டிஸ்சார்ஜ் செய்திருந்தால் அதற்கு முன்பாக அசல் ஆவணங்கள் வேறு யாருக்கும் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரிதான். 2014 ம் வருடம் டிஸ்சார்ஜ் செய்திருந்தாலும் உடனடியாக ரசிது பெறாமல் 2018 ம் ஆண்டு தான் ரசிதை பதிவு செய்தேன் என்றால் சரிதான். அசல் ஆவணங்கள் இல்லாததால் உடனே செய்ய இயலவில்லை. 2014 ம் வருடம் அசல் ஆவணங்களை தீனதயாளன் வாங்கி சென்று விட்டார் என்று வங்கியிலருந்து கேள்வி பட்டவுடன் தீனதயாளனுக்கு கடிதமோ அல்லது வழக்கறிஞர் அறிவிப்போ அனுப்பினேனா என்றால் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளேன்.

11. போலிசார் என்னை விசாரித்து போது நான் அஜர் எதிரி தீனதயாளனுக்கு என்றைக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரிக்கு நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பையோ அல்லது அதன் ஒப்புகை அட்டையையே போரிலசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் இல்லை வாய்மொழியாக அந்த விவரத்தை மட்டும் சொன்னேன். உண்மையிலேயே அவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருந்தால் மற்ற ஆவணங்களை போலிசாரிடம் ஒப்படைத்த மாதிரி அந்த ஆவணத்தையும் ஒப்படைத்து இருப்பேன் என்றால் சரியல்ல.

12. வழக்கு சொத்துக்கள் சம்பந்தமாக ஆஜர் எதிதிரயின் மனைவி சுகந்தி எனது அம்மா மற்றும் குடும்பத்தார் மீது வழக்கு சொத்துக்கள் தங்களுக்கு தான் சொந்தம் என்று விளம்புகை பரிகாரம் கோரி செங்கல்பட்டு கூடுதல் மாவட்ட நீதிமன்றததில் OS, 252/2020 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால்

சரிதான். போலிசார் என்னை விசாரித்த போது எனது தாத்தாவின் கையொப்பத்தை காண்பித்து இந்த கையொப்பம் தெரியுமா என்று விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அ.சா.ஆ.13 ல் எனது தாத்தா கிரையம் செய்த சொத்து, அ.சா.ஆ. 3 ன் ஒரு பகுதி என்றால் சரிதான். அ.சா.ஆ- 13, 21/04/2004 ல் எனது தாத்தா கிரையம் கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். அ.சா.ஆ. 13 ல் பக்கம் 2 ல், 2வது பத்தியில் 3வது வரியில் "அசல் பத்திரம் கைசோர்ந்து விட்ட படியால்" என்று அ.சா.ஆ. 3 ல் குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த அசல் ஆவணம் தொலைந்து போனதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அந்த ஆவணத்தின் தேதி 21/04/2004 ஆகும். ஆஜர் எதிரியின் மனைவி சுகந்தி கிரையம் செய்த சொத்தை பற்றி இந்த வழக்கில் போலிசார் என்னை விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். அ.சா.ஆ. 12 புகாரில் சுகந்திர போலிசாய ஆவணங்களை தயார் செய்து ரகுராம், ரவிசங்கருக்கு விற்றதாக சொல்லப்பட்டுள்ளதா என்றால் வேறு புகாரில் சொல்லப்பட்டுள்ளது. எனவே இந்த புகாரில் சொல்லாததால் போலிசார் என்னை விசாரித்தபோது சொல்ல வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

13. போலிசார் என்னை விசாரித்தபோது அ.சா.ஆ. 4 மற்றும் அ.சா.ஆ- 10 யை காண்பித்து முத்துசாமி முதலியாரின் கையொப்பம் பற்றி விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். என்னுடைய மாமா சிவப்பிரகாசம் 1992 ல் நிலங்கள் வெங்கடசாமி ரெட்டியாருக்கு நிலச்சீர்திருத்த சட்டத்தின் படி நிலத்தை அளக்க வருகிறார்கள் நீங்கள் ஒரு நபரை அனுப்புங்கள் என்று ஏழுதிய கடிதம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கு சொத்துக்கள் எனது தாத்தாவின் ஆயுள் காலத்தில் அவர் சுவாதினத்தில் தான் உள்ளது என்பதை நிரூபிக்க வருவாய் ஆவணங்கள், ஏதேனும் போலிசார் விசாரணையின் போது போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அ.சா.ஆ. 13 ல் ஆஜர் எதிரி தீனதயாளனின் சாட்சி கையொப்பம் உள்ளதா என்றால் உள்ளது.

14. அ.சா.ஆ. 13 ல் உள்ள எதரி தீனதயாளனின் கையொப்பத்திற்கும் அ.சா.ஆ. 10 ல் உள்ள தீனதயாளன் போடப்பட்டதாகா சொல்லும் கையொப்பத்திற்கும் வித்தியாசங்கள் உள்ளது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. மார்ச் 2014 ல் தான் டிஸ்சார்ஜ் சர்டிபிகேட் பெறப்பட்டபடியால் அதற்கு முன்பாக அசல் ஆவணங்களை எதிரியிடம் வங்கி கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

15. எனது தாத்தா மற்றும் மாமாவின் கையொப்பம் இல்லாமல் வங்கியில் ஆவணங்கள் எதிரியிடம் கொடுக்கப்பட்டிருக்க மாட்டாது என்றால் சரியல்ல. புகாரில் கண்டுள்ள 2011 கிரைய பத்திரத்திற்கும் எதிரிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை வைத்து எதிரி எந்த பரிவர்த்தனையோ, செய்ததாகவோ அல்லது எந்த லாபமும் அடைந்ததாகவோ நான் அவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல., எனது தாயார் கொடுத்த பொய்யாக புகாருக்கு பவ்வியப்பட்டு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.